00234

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 03

**LLU3505- ஒப்புரவும் நம்பிக்கைகள் சட்டமும்**
**தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II 2023/2024**

காலம் : ஒரு (01) மணித்தியாலங்கள்.

திகதி : 09.01.2025 நேரம்: மு.ப. 09.30 - மு.ப. 10.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02)
ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "ஒப்புரவு நிவாரணங்கள் அவற்றின் நெகிழ்வுத்தன்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதன் காரணமாக அடிக்கடி பாராட்டிற்கு உட்படுகிறது. எனினும் அவற்றினுடைய தற்துணிவிலான இயல்பு காரணமாக நீதிமுறைத் தீர்ப்புகளில் கணிக்க இயலாமை மற்றும் ஒரு சீரற்ற தன்மைக்கு வழி வகுக்கலாம்"

   மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில், ஒப்புரவு நிவாரணங்களின் பிரயோகம் நீதிமுறைத் தற்துணிவு மற்றும் சட்ட நிட்சயத்தன்மை என்பவற்றுக்கிடையில் சரியான சமநிலையை பேணுகின்றதா என்பதை மதிப்பிடுக. அவற்றின் பயன்பாட்டை ஆளுவதற்கு இறுக்கமான வழிகாட்டிகள் இருக்க வேண்டுமா அல்லது அவற்றினுடைய உள்ளார்ந்த நெகிழ்வுத்தன்மை நீதிமுறை அக்கறைகளை சிறந்த முறையில் பாதுகாக்கிறதா?

   உமது விடை பொருத்தமான அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

   (20 புள்ளிகள்)

2. "சிரில்" என்பவன் ஆதனம் ஒன்றினை "பியல்" என்பவனுக்கு நொத்தாரிசு முகதாவில் கைமாற்றினான். இக்கைமாற்றம் அதனுடைய முகத்தோற்றத்தில் முழுமையானதாக தென்படுகிறது. எனினும் குறிப்பிட்ட திகதி ஒன்றில் கொள்வனவு பணத்தை மீள செலுத்துவதன் ஊடாக பியல், சிரிலுக்கு ஆதனத்தை மீள கைமாற்றம் செய்வான் என்ற வாய்மூல உடன்படிக்கை ஒன்றும் அவர்களிடையே இருந்தது. இவ்வாய்மூல உடன்படிக்கை நொத்தாரிசு முன்னிலையில் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பிட்ட திகதியில் சிரில் கொள்வனவு பணத்தை மீள செலுத்திய போது பியல் சொத்தினை மீள கைமாற்றம் செய்வதற்கான உடன்படிக்கை நொத்தாரிசு முன்னிலையில் மேற்கொள்ளப்படாததன் காரணமாக மீளக் கையளிக்க மறுக்கின்றான். மேலும் கைமாற்ற ஆவணத்தின் முழுமையான நியதிகளின் அடிப்படையில் தங்கியிருந்து, பியல் மீள

செலுத்தும் பணத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஆதனத்தை மீளளிக்கவோ எவ்விதமான கடப்பாடும் இல்லை எனக் கோருகிறான்.

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச்சட்டம் அல்லது சட்ட அதிகாரங்களின் அடிப்படையில் சிரிலுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -